ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

மதுரகவி தாசன் இயற்றிய

# காஞ்சி குன்றத்தான்

அன்பினால் தன்னடியார்க்கு இனியன், செம்மைப்
பொன்மேனியான் சீறிய சிங்கமாகித்
தனியன் தானொருவனாய் எவ்வுலகும் படைத்த
காஞ்சிக் குன்றத்தான் என்னுள்ளத்துள் நின்றானே க

முனிவரும் வேதியரும் முன்னின்று தொழுதேத்த
கனியுதிர் சோலைசூழ் காஞ்சி தனில்
இனி எவ்வுலகும் உய்ய வந்துதித்த, அத்திகிரி
காஞ்சிக்கோன் என்னுள்ளத்துள் நின்றானே உ

நம்பிக்குத் தோழனாய் நான்மறையின் பொருளாய்
தும்பிக்கை உயர்த்தித் துதித்த ஆனையின்
வெம்மைத் துயர் தீர்க்க விரைந்து வந்த
காஞ்சி அருமறையோன் என்னுள்ளத்துள் நின்றானே ௩

வெஞ்சுடராய் அமரர்க்கும் அரியானாய், மடுவில்
நஞ்சுடை நாகத்தின் மேல் நர்த்தனமாடித்
தஞ்சமுறு அடியார்க்குத் தனியொரு தேவாய்
காஞ்சி அத்திகிரியோன் என்னுள்ளத்துள் நின்றானே ௪

தீங்கிலாத எம்மான் திரிவிக்ரமன் தானாகி
ஓங்குபெரும் உருவினால் மூவுலகும் அளந்து
ஆங்கவனக்கு நிகரில்லாது எவ்வுலகும் அமைத்த
காஞ்சி நெடியோன் என்னுள்ளத்துள் நின்றானே ரு

நினைவரிய பெருமான் ஆழ்கடல் கடைய
வினையறுக்க வல்ல திருமகள் தானுதித்து
பனையளந்த தோளினான் மார்பில் உறையும்
காஞ்சித் திருநாதன் என்னுள்ளத்துள் நின்றானே சு

கானகம் சென்று அரக்கன் தனை அழித்து
வானகம் உறையும் அமரர்கள் கோனும்
தானகம் பணிந்து கசிந்து தொழும்
காஞ்சி தேவராஜன் என்னுள்ளத்துள் நின்றானே எ

அங்கோர் முனிவன் பிறந்ததால், வினை
தாங்கா மானிடர் கலி அழிந்துய்ய
ஓங்குபெரும் புகழ் கோயில் தர நின்ற
காஞ்சி வரதராஜன் என்னுள்ளத்துள் நின்றானே அ

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

உம்பர் கோனுக்கும் கோனாய், வேகத்தினால்
வந்த ஆறு நிற்கக் கிடந்தானின்
தம்பியாய், தனக்கோர் நிகரில்லாது நின்ற
காஞ்சிப் பதியோன் என்னுள்ளத்துள் நின்றானே கூ

துஞ்சித் தொழுது உள்ளத்துள் நின்றானை
காஞ்சியின் அனந்தன் வேங்கடார்யன்
செஞ்சொல்லால் பாடி இம்மாலை தொகுத்து
காஞ்சிக் குன்றத்தான் உள்நிற்க மகிழ்ந்தானே க0

---